பத்திரிக்கைச்செய்தி

செ.வெ.எண்: 08 நாள்: 07.08.2010

தமிழ்நாடு அரசு ஆணை (நிலை) எண்: 15 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல(ஆதித் 6)த்துறை நாள் 19.2.2010-ன்படி ஆதிதிராவிடர் இன சலவைத் தொழிலாளர்களின் சமூக கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கான அரசு செயல்படுத்தும் திட்டங்களை பயன்பெறும் வகையில் ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு அதில் உறுப்பினர்களாக பதிவு செய்பவர்களுக்கும் அவர்களது குடும்பத்தார்களுக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளது.

தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியத்திற்கு உறுப்பினர் சேர்க்கை நடவடிக்கைகள் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. இவ்வாரியத்தில் உறுப்பினராகச் சேருவதற்கு, 18 வயது முடிவடைந்த மற்றும் ஒவ்வொருவரும் தங்களது சாதிச்சான்று, குடும்பஅட்டை நகல் மற்றும் புகைப்படத்துடன், புதுக்கோட்டை மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலகத்தில் விண்ணப்பித்துக் கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது. தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியத்தில், மேற்குறிப்பிட்டவாறு ஆதிதிராவிடர் இன சலவைத் தொழிலாளர்கள் அனைவரும் உறுப்பினராகப் பதிவு செய்து நல வாரிய அட்டை, பெற்று உரிய நலத்திட்ட உதவிகளைப் பெற்று பயனடையுமாறு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ஆ.சுகந்தி.இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவகம், புதுக்கோட்டை.